**2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதிக்கான உடபலாத்த பிரதேச சபையின் பொதுக்கூட்ட அறிக்கை**

**நேரம் - மு.ப 10.00**
**வருகை**

| | |
|---|---|
| 01. திரு.D.G.குணசேண | கௌரவ. தலைவர் |
| 02. திரு.L.N.அசேல அமரசேன | கௌரவ உபதலைவர் |
| 03. திரு.R.M கீர்த்தி ரத்னாயக்க | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 04. திரு.A.தர்மசிறி அகலவத்த | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 05. திரு.S.A.நவரத்ன பண்டா | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 06. திரு.M.G.உபசந்திர ஜயபதி | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 07. திரு.U.G.பாலித மகிந்த ஜினதாச | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 08. திரு.M.G.மொஹமட் முராட் | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 09. திரு.D.G.ஜயந்த கீர்த்திசிங்க | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 10. திரு.D.W.G.ஹேமகுமார நயனாநந்த | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 11. திரு.W.பிரேமதிலக | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 12. A.H.A.ரத்னாயக்க | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 13. திரு.R.M.பிரேமரத்ன பண்டார | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 14. திரு.D.M.திசாயு மஞ்சுள திசாநாயக்க | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 15. திரு.H.M.நீல் சுகத் குமார | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 16. திரு.R.A.தனுஷ்க இந்திரஜித் | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 17. திரு.A.சமந்த குமார ஆரியதாச | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 18. திரு.W.D.G.குணதிலக | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 19. திரு.H.M.யஸஸ் பண்டார தெனுவர | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 20. D. திரு.D.பிரசன்ன மனோஜ் திலகரத்ன | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 21. திரு.R.G.ரஞ்சன் ராஜபக்ஷ | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 22. திரு.G.A.அருண பிரசன்ன | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 23. திரு.முத்து நீலமேகம் | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 24. திரு.தங்கவேல் காமராஜன் | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 25. திரு.குமாரவேல் கணகரட்ணம் | கௌரவ பிரதேச சபை உறுப்பினர |
| 26. திருமதி.H.G.சுசிலாவதி | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| **27.** திருமதி.P.T.G.வயலா வினோதனி சந்திரபால | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 28. திருமதி.W.டிமோஷி ஞானலதா | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 29. திருமதி.K.W.கோகிலா குமாரி வராஹேன | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 30. திருமதி.செல்வராஜ் கார்த்திகா | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 31. G.R.சமிலா பொன்சேகா | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 32. H.G.திருமதி.சுபத்ரா சமரநாயக்க | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 33. திரு.K.சுப்பையா ஜீவா | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 34. திருமதி.பிச்சை செல்வபுவனேஸ்வரி | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 35. திரு.N.R.M.D.நவரத்ண ரத்னாயக்க | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 36. திருமதி.கயானி ஶ்ரீயாமாலா எதுகல்பே | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |
| 37. திரு.சாமிக ருவன் தசநாயக்க | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் |

**சபைக்கு வருகை தராத உறுப்பினர்கள்**

38. திரு.W.M.G.W..B.வேரபிடிய கௌரவ பிரதேச சபை உறுப்பினர்
39. திரு.A.C.மொஹமட் பசால் கௌரவ பிரதேச சபை உறுப்பினர்
40. திரு.R.M.உதயகுமார திசாநாயக்க கௌரவ பிரதேச சபை உறுப்பினர்
41. M.G.R.பாலித அபேரத்ன கௌரவ பிரதேச சபை உறுப்பினர்
42. திரு.R.M.ரவிந்திர தினுக ரத்னாயக்க கௌரவ பிரதேச சபை உறுப்பினர்
43. திருமதி.A.W.சத்துராணி சேனாநாயக்க கௌரவ பிரதேச சபை உறுப்பினர்

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**

மு.ப 10.00 மணிக்கு சபையின் நடவடிக்கைகளை ஆரம்பித்தார்.

**1. கடந்த பொதுக்கூட்ட அறிக்கையை சபை ஏற்றல்**

கடந்த 2021 டிசம்பர் மாதம் 24ஆம் திகதி பொதுக்கூட்ட அறிக்கைக்கு சபையின் அனுமதியை பெற்றுக்கொள்ளல்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**

கடந்த 2021 டிசம்பர் மாதம் 24ஆம் திகதி பொதுக்கூட்ட அறிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

**கௌரவ.கயானி ஸ்ரீயாமாலா - உறுப்பினர்**

கடந்த டிசம்பர் மாத 24ஆம் திகதி பொதுச்சபை அறிக்கையை உண்மையான அறிக்கை என ஏற்றுக் கொள்வது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

**கௌரவ.ஹேமகுமார நயனாநந்த - உறுப்பினர்**

கடந்த டிசம்பர் மாதம் 24ஆம் திகதி பொதுச்சபை அறிக்கையை உண்மையான அறிக்கை என ஏற்றுக்கொள்வது பொருத்தமாகும் என கொண்டு வரப்பட்ட பிரேரணையை நான் ஆமோதிக்கின்றேன்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**

அனைவரும் கைகளை உயர்த்தி இணக்கத்தை தெரிவித்தனர்.
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**கௌரவ தலைவரின் விசேட அறிவித்தல்**

2.1 எமக்கு என்ன பிரச்சினைகள் இருந்தாலும் இச்சில வருடங்களுக்குள் உடபலாத பிரதேச மக்களுக்கு பாரிய சேவையை மேற்கொள்ள முடியுமாக இருந்ததாகவும், அதில் எமக்கு அதிமேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதமர் உட்பட அரசாங்கமும் கௌரவ அமைச்சர் குழு, கௌரவ உறுப்பினர்கள் உட்பட மற்றைய அனைவரின் ஒத்துழைப்பு அதற்காக கிடைத்தாகவும், உடபலாத கௌர பொதுச்சபையிடத்திலிருந்து கிடைக்கப்பெற்ற ஒத்துழைப்புடன் அதிகார எல்லைக்குள் உள்ள மக்களுக்கு பாரிய சேவையினை மேற்கொண்டதாகவும், அது தொடர்பாக நான் தலைவர் என்ற ரீதில் மகிழ்ச்சியடைகின்றேன். எமக்கு பெப்ரவரி மாதத்தில் பொதுச்சபையை கலைப்பதற்கு இருந்ததாகவும், எனினும் அரசின் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் இன்னும் ஒரு வருடத்திற்கு உள்ளூராட்சி சபைகளின் காலத்தை நீடித்திருப்பதால் இன்னுமொரு வருடத்திற்கு மக்களுக்கு சேவை புரிவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாகவும் அது தொடர்பாக தான் உட்பட கௌரவ உறுப்பினர் குழுவிலுள்ள அனைவரும் மகிழ்ச்சியடைவார்கள் எனத் தெரிவித்தார்.

2.2 கௌரவ.வேறபிடிய உறுப்பினர் சுகயீனமுற்றிருப்பதாகவும் அவர் சத்திரசிகிச்சை ஒன்றிற்கு முகம் கொடுப்பதற்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அது தொடர்பாக அறிவித்து கடிதம் ஒன்றை அனுப்பியிருப்பதாகவும் தெரிவித்து அவர் விரைவில் குணமடைய பிரார்த்தித்து அவருக்கு மரியாதை செலுத்தும் முகமாக அது தொடர்பான அறிவித்தலை சபைக்கு முன்வைத்தார்.

1. **3.சபைக்கு அனுப்பப்பட்டுள்ள ஆவணங்கள்/மனுக்கள்/முறைபாடுகள்/தொடர்பாடல் கடிதங்களை சபைக்கு முன்வைத்தல்**

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
சபைக்கு முன்வைப்பதற்கான ஆவணங்கள்/மனுக்கள்/முறைபாடுகள்/தொடர்பாடல் கடிதங்கள் இல்லை என தெரிவித்தார்.

1. 04. கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள பிரச்சினைகள் - இல்லை என தெரிவித்தார்.

2. 05. கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள பிரேரணைகள்

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
**தீர்மான இலக்கம் 5 (1.1)**

5(1.1) களஞ்சிய பொருட்பதிவேட்டு ஆவணங்களை திருத்தம் செய்வதற்காக பொதுச்சபையின் தீர்மானத்தை பெற்றுக்கொள்வது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

**கௌரவ.கீர்த்தி ரத்னாயக்க - உறுப்பினர்**
களஞ்சிய பொருட்பதிவேட்டு ஆவணங்களை திருத்தம் செய்வதற்காக கொண்டு வரப்பட்ட பிரேரணை இறுதியில் நிலுவையை அறிந்து கொள்ளும் விடயத்தில் பிரச்சினை ஏற்படுவதால் அதனை திருத்திக் கொள்ளும் முகமாக களஞ்சியசாலை பொருட்பகுப்பாய்வு ஆவணங்களை திருத்தம் செய்வது பொருத்தமாகும் என கொண்டு வரப்பட்ட பிரேரணையை நான் ஆமோதிக்கின்றேன்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
அனைவரும் கைகளை உயர்த்தி இணக்கத்தை தெரிவித்தனர்.
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
**தீர்மான இலக்கம் 5 (1.2)**

5(1.2) 2022ஆம் ஆண்டிற்காக விலைமனு கோரப்படாத கடை அறைகளை மீண்டும் விலைமனு கோருவதற்காக பொதுச்சபையின் அனுமதியை பெற்றுக்கொள்வது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்

**கௌரவ உபதலைவர் அசேல அமரசேன அவர்கள்**
கடந்தமுறை விலைமனுக்களை முன்வைக்கும் போது நானும் விலைமனு கோரல் குழுவின் அங்கத்தவராக இருந்தேன். சில விலைமனுக்கள் முன்வைக்கப்படாமல் இருந்ததாகவும், தொலுவ வியாபார சந்தையில் இரண்டு கடை அறைகள் தொலுவ பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டதாகவும், மற்றைய கடை அறைகள் 10இல் 9 விலைமனு கோரல் மூலம் பெறப்பட்டுள்ளதாகவும், தொலுவ வியாபார தொகுதியை நவீனமயப்படுத்தும் பிரேரணை என்னால் கொண்டு வரப்பட்டதாகவும், அதன் வருமானம் இன்று சபைக்கு கிடைக்கிறது, இது வரவு செலவு திட்டத்தின் மூலம் எமக்கு வழங்கப்படும் நிதியை அதிகரித்துக் கொள்வதற்கு முதலீடாக அமைந்ததாகவும், தொலுவ கடை அறைகளை பெற்றுக் கொள்வதற்கு விலைமனுதாரர்கள் இருப்பதாகவும், அவர்கள் அடிக்கடி அது தொடர்பாக விசாரிக்கின்றனர். நாரங்விட்ட தேங்காய் உற்பத்தியின் விலைமனுவின் தொகை தொடர்பாக பிரச்சினை ஒன்று காணப்படுவதாகவும், இதனை சிறிய தொகைக்கு வழங்குவதாகவும், இன்று சந்தையில் தேங்காய் ஒன்றின் விலையுடன் பார்க்கும் போது விலைமனு வழங்கப்படும் தொகை போதுமானதாக இல்லை. அதனால் இந்த நாரங்விட்ட தேங்காய் உற்பத்தி தொடர்பான மதிப்பீட்டு தொகையை அதிகரித்து பெற்றுக் கொடுத்தால் மிகவும் பயனுள்ளதாக காணப்படும், அதனால் சபைக்கு கிடைக்கும் வருமானம் அதிகரிக்கும் எனவும், அதனால் இது தொடர்பாக அவதானத்தை செலுத்துமாறும், இதில் 21 தேங்காய் மரங்கள் காணப்படுவதாகவும் தெரிவித்து, 2022ஆம் ஆண்டிற்காக விலைமனு கோரப்படாத கடை அறைகளை மீண்டும் விலைமனு கோருவது பொருத்தமாகும் என கொண்டு வரப்பட்ட பிரேரணையை நான் ஆமோதிக்கின்றேன்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
அனைவரும் கைகளை உயர்த்தி இணக்கத்தை தெரிவித்தனர்.
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>**
**<u>தீர்மான இலக்கம் 5 (1.3)</u>**

5(1.3) பும்மலே தகனச்சாலையை நிர்மாணிதற்கான வேலைத்திட்டத்திற்காக கீழ் குறிப்பிட்டவாறு தொழில்நுட்ப மேற்பார்வை குழுவை நியமிப்பதற்காக பொதுச்சபையின் அனுமதியை பெற்றுக்கொள்வது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

01. தலைவர் - ஈ.எம்.பி.சீ.ஏகநாயக்க அவர்கள்
மாகாண உள்ளூராட்சி பொறியியலாளர், மாகாண உள்ளூராட்சி திணைக்களம் மத்திய மாகாணம்

02. அங்கத்தவர்- டபிள்யு.எம்.ஜி.கே.ஆர்.பண்டார அவர்கள்
கணக்காய்வாளர், மாகாண உள்ளூராட்சி திணைக்களம், மத்திய மாகாணம்.

03. அங்கத்தவர்- உதய பரணகம்பொல அவர்கள்
பொறியியலாளர், இலங்கை தேசிய பொறியியலாளர் மற்றும் ஆராய்ச்சி நிலையம்

04. அங்கத்தவர்- சீ.விக்கிரமசிங்க அவர்கள்
தொழில்நுட்ப அதிகாரி, உடபலாத பிரதேச சபை, தெல்பிடிய.

**<u>கௌரவ உபதலைவர் அசேல அமரசேன அவர்கள்</u>**

இது தன்னுடைய பிரேரணைக்கமைய நடைமுறைப்படுத்தப்படுவதற்கு உள்ளது. சபைக்கு வருமானம் கிடைக்கும் பிரேரணையாக பும்மலே தகனச்சாலையை அடையாளப்படுத்த முடியும். தொலுவ பிரதேசத்தில் 33 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளடக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் கங்கவட்ட கோரளை பிரதேசத்திற்கு அருகாமையில் உள்ளது. இதில் புகை வெளியில் செல்வதிலும் பிரச்சினை இல்லை. அதனால் இதனை கடந்த சபையில் நாம் கதைத்துக் கொண்டு வந்ததாகவும், சபை காலம் ஒரு வருடத்தினால் அதிகரிக்கப்பட்டிருப்பதை குறித்து நான் மகிழ்ச்சியடைவது இவ்வாறான விடயங்களை மேற்கொள்ள முடியும் என்பதாலேயே ஆகும். எம் அனைத்து உறுப்பினர்களினதும் பெயர் நிலைத்து நிற்கும் பிரேரணையாக தகணச்சாலை நிர்மாணிக்கப்படுவதாகவும், அதன் கல்வெட்டில் எம் அனைத்து உறுப்பினர்களினதும் பெயர் பொறிக்கப்படுவதாகவும், இந்நடவடிக்கைகளுக்காக செயலாளர் மிகவும் ஊக்கத்துடன் செயற்படுகின்றார். மேலும் பிரதேச செயலாளரும் இது தொடர்பாக எமக்கு ஒத்துழைப்பை வழங்குகின்றார். பிரதேசத்தில் மரண சங்கங்கள் 4 காணப்படுகின்றது. தகனச்சாலையை அமைப்பதற்காக நிலத்தை வழங்குவது தொடர்பாக மகிழ்ச்சியடைவதாகவும், இதில் நாம் முன்பு தீர்மானித்தது போல தகனச்சாலையை அலியத்தையில் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டாலும் அங்குள்ள மக்களுக்கு தகனச்சாலையின் புகை செல்வதால் விரும்பவில்லை எனவும், அதனால் பும்மலையில் தகனச்சாலையை அமைப்பது தொடர்பாக எதிர்ப்பை வெளியிடாத பும்மலை பிரதேச மக்களுக்கு மிகப்பெரிய நன்றியை தெரிவிப்பதாகவும். அத்துடன் எதிர்வரும் மாதங்களுக்குள் அரசியல் இல்லாத வைபவம் ஒன்றை நடாத்துவதற்கு நான் பொறுப்பெடுக்கின்றேன். அனைத்து உறுப்பினர்களுக:கும் அவர்களின் கௌரவம் பாதிக்காத வகையில் நடவடிக்கை மேற்கொள்வதற்கான பொறுப்பை நான் எடுக்கின்றேன் என தெரிவித்து பும்மலே தகனச்சாலையை நிர்மாணிக்குமு் வேலைத்திட்டம் தொடர்பாக தொழில்நுட்ப மேற்பார்வை குழுவை நியமிப்பது பொருத்தமாகும் என கொண்டு வரப்பட்ட பிரேரணையை நான் ஆமோதிக்கின்றேன்.

**<u>கௌரவ.உபசந்திர ஜயபதி - உறுப்பினர்</u>**
நான் இப்பிரேரணை குறித்து கவலையடைகின்றேன். எமது உப தலைவர் இப்பிரேரணையை கொண்டு வந்தாலும் நான் இப்பிரேரணையை பல வருடங்களுக்கு முன் சபைக்கு முன்மொழிந்தேன். அதில் கௌரவ சம்பிக ரணவக பாராளுமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்குவதாக தெரிவித்திருந்தாலும் நான் தகனச்சாலையை அமைப்பதற்கு முன்மொழிந்தது பிரதேசத்திலுள்ள மக்களின் எண்ணிக்கையை கவனத்திற் கொண்டதாலேயே ஆகும். புபுரஸ்ஸ, லெவலண்ட், அப்லேண்ட், ஹேவாஹெட்ட வரைக்கும் தகனச்சாலை ஒன்று இல்லை, எமது சபையின் நிதியில் வேலை செய்யும் போது எமது சபைக்கு

வருமானம் கிடைக்கும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தன்னுடைய பிரதேசத்திற்கு மாத்திரம் வேலை செய்யப்படுகிறது என்கிற விடயத்தை நான் காணவில்லை கொஸ்ஸின்ன, கம்பொல, புஸ்ஸல்லாவ போன்ற இடங்களில் தகனச்சாலைகள் காணப்பட்டாலும் பிரேரணைகள் அனுமதிக்கப்பட்டிருப்பின் பரவாயில்லை. பல வருடங்களுக்கு முன் நிலத்தை ஒதுக்கீடு செய்து நடவடிக்கை தயார் படுத்தப்பட்டிருந்தாலும், இவ்வாறான பிரதேசத்தில் தகனச்சாலை ஒன்றை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக சபையின் சிரேஷ்ட உறுப்பினராக என்னுடைய ஆழ்ந்த கவலையை மற்றும் அதிருப்தியை வெளியிடுவதாக தெரிவித்தார்.

**<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>**

கௌரவ பாட்டலி சம்பிக்க பாராளுமன்ற உறுப்பினரின் நிதியின் கீழ் தகனச்சாலை ஒன்றை நிர்மாணிப்பதாக குறிப்பிட்டாலும் அது மேற்கொள்ளப்படவில்லை. இது என்னுடைய தனி தீர்மானம் அல்ல, கலந்துரையாடி அதன்பின் இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டதாகவும், நிலத்தை ஒதுக்கீடு செய்து பேசிக்கொண்ட தீர்மானமாகும். இத்தகனச்சாலையை தொலுவையில் செய்தாலும் யாருக்கும் பிரச்சினையில்லை. எமது பிரதேச மரண நிகழ்வுகளின் போது புஸ்ஸல்லாவ பிரதேசத்திற்கு இறந்தவரின் உடல் தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். உங்களுடைய கருத்துக்கள் தொடர்பில் நானும் கவலையடைகின்றேன். எனினும் தொலுவையின் தகனச்சாலையை நிர்மாணிக்கும் போது ஹிதகல வரையிலும் உள்வாங்கப்படும். அதனால் நாம் பிரச்சினைகளுக்கு செல்லாமல் சுமுகமாக நடவடிக்கை மேற்கொள்வோம் எனவும், கௌரவ ஜயபதி உறுப்பினர் முதலாவதாக பிரேரித்தாலும் அது மேற்கொள்ளப்படவில்லை எனவும் இரண்டாவதாக பும்மலையில் நிர்மாணிப்பதற்கு பிரேரிக்கப்பட்டதாகவும், அது தொடர்பாக யாராவது எதிர்ப்பை வெளியிடுகின்றீர்களா எனக் கேட்டார்.

**<u>கௌரவ.டபிள்யு.பிரேமதிலக - உறுப்பினர்</u>**

கௌரவ ஜயபதி உறுப்பினர் அன்று முன்மொழிந்த பிரேரணையை நான் ஆமோதித்ததாகவும், அவர் பல்லேதெல்தோட்ட கோட்டத்தில் இடத்தை ஒதுக்கீடு செய்து அனைத்து வேலைகளும் முடிந்ததாக சபையில் அறிவித்தார். அப்போது நாம் சந்தோஷமடைந்தோம், பாத்தஹேவாஹெட்ட அதிகார எல்லைக்குள் மட்டுமல்லாது கங்கவட்ட கோரளையிலும் தகனச்சாலை ஒன்று இல்லை. எனினும் நாம் மத்திய நிலையமாக பல்லேதெல்தோட்ட கோட்டம் பொருத்தமாகும் என பிரேரித்தாலும், பும்மலையில் தற்போது பிரேரிக்கப்பட்டுள்ள இடத்தை பார்க்கும் போது கம்பொல தகனச்சாலைக்கு மிகவும் அருகாமையில் உள்ளது, கொஸ்ஸின்னயிலும் தகனச்சாலை ஒன்று உள்ளது. இங்கு அநியாயம் நிகழ்வது பல்லேதெல்தோட்ட, ஹிதகல, மொரஹேன, தும்பெலவக போன்ற இடங்களுக்கு தகனச்சாலை ஒன்று இல்லாததால் இரண்டு மணித்தியாலங்கள் செலவழித்து நீண்ட தூரம் செல்ல வேண்டி இருப்பதால் முடியுமாக இருந்தால் சபையின் அனுமுதியை பெற்றுக் கொண்டு கௌரவ ஜயபதி உறுப்பினர் குறிப்பிட்டது போல பல்லேதெல்தோட்டையில் தகனச்சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் மிகவும் பொருத்தமாகும் என தெரிவித்தார்.

**<u>கௌரவ.கீர்த்தி ரத்னாயக்க - உறுப்பினர்</u>**

இப்பிரேரணைகளில் ஒன்றை கௌரவ ஜயபதி உறுப்பினர் கொண்டு வந்தார். அதில் கௌரவ பாட்டலி சம்பிக்க பாராளுமன்ற உறுப்பினரிடத்தில் நிதி பெற்றுக் கொண்டு பல்லேதெல்தோட்டையில் தகனச்சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கு சபைக்கு பிரேரித்தார். மற்றைய பிரேரணையானது கௌரவ உப தலைவர் தொலுவ பும்மலையில் தகனச்சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கு கொண்டு வந்த பிரேரணையாகும். கௌரவ உப தலைவர் வரவு செலவு திட்ட பிரேரணைகளைப் போன்று சிற்சில குழு கூட்டங்களில் இது தொடர்பாக பிரேரித்து குரல் எழுப்பியதாகவும், சபை நிதியிலிருந்து நடைமுறைப்படுத்துமாறு கடந்த வருடத்தைப் போல் முன்னைய ஆண்டுகளிலும் கௌரவ உப தலைவர் கோரிக்கை விடுத்ததாகவும், அப்பிரேரணை அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், கௌரவ பாட்டலி சம்பிக்க பாராளுமன்ற உறுப்பினரிடத்திலிருந்து நிதி ஒதுக்கப்பட்டிருந்தால் அப்பிரேரணையை எம்மால் நடைமுறைப்படுத்தியிருக்க முடியும், கௌரவ ஸயபதி உறுப்பினர் எவ்வளவு கஷ்டப்பட்டு இடத்தை ஒதுக்கிக் கொண்டாலும் நிதி கிடைக்கவில்லை எனவும், இவ்வாறான பல வேலைகள் மேற்கொள்ளப்படுவதற்கு பிரேரிக்கப்பட்டிருந்தாலும், ஆட்சி மாற்றத்துடன் எம்மால் வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியாமல் போனது. பும்மலை பிரதேசத்திற்கு தகனச்சாலை ஒன்று தேவை என மறைந்த பிரதமரிடத்திலும் எண்ணம் ஒன்று இருந்தது. அதற்கமைய கௌரவ உப

தலைவர் இப்பிரதேசத்தை பிரதிநிதித்துவப் படுத்துவதால் மக்களின் கோரிக்கைக்கமைய இப்பிரேரணையை கொண்டு வந்தார். இடத்தை ஒதுக்கிக் கொள்ளுதல் போன்ற சிற்சில சந்தர்ப்பங்களில் நானும் அவ்விடங்களுக்குச் சென்றிருக்கின்றேன். உடபலாத மக்களுக்கு எவ்வாறாயினும் சேவை நடைபெறும் எனில் நாம் அதுகுறித்து மகிழ்ச்சியடைய வேண்டும். ஹேவாஹெட்ட பின்தள்ளிய பிரதேசம் என்பதால் அப்பிரதேசத்தின் பிரதேச சபை மற்றும் அப்பிரதேச தலைவர்கள் அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் கௌரவ கிரிஎல்ல பாராளுமன்ற உறுப்பினரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புஸ்ஸல்லாவ தகனச்சாலை கட்டப்பட்டது என தெரிவித்து பும்மலேயில் தகனச்சாலையை அமைப்பது பொருத்தமாகும் என தெரிவித்தார்.

**<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>**

புஸ்ஸல்லாவ தகனச்சாலை எல்லையின் நிர்மாணிக்கப்பட்டதாகவும், அது தோட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் கீழ் பெருந்தோட்ட மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டது. இது நாம் நிர்மாணித்த தகனச்சாலை அல்ல. நாம் தொடர்ச்சியாக உடபலாத மக்களுக்கு சேவை வழங்கும் முகமாகவே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மற்றையவர்கள் சேவையினை பெற்றுக்கொள்ள வருவார்களானால் பிரச்சினையில்லை. எனினும் உடபலாத மக்களின் நிதியிலிருந்து அடிப்படையாக உடபலாத மக்களுக்கே சேவையினை வழங்க நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். எமது அதிகார எல்லையின் மத்திய நிலையமாக தொலுவ காணப்படுவதால் அது தொடர்பாக அனுமதியை பெற்றுக் கொண்டதாகவும், நாம் நிலத்தை அளந்து நடவடிக்கை மேற்கொண்டு முடிவடைந்து இருப்பதால் இந்நடவடிக்கையை மேற்கொண்டு எதிர்காலத்தில் வேறு இடம் பார்த்து நடவடிக்கை மேற்கொள்வோம் என தெரிவித்தார்.

**<u>கௌரவ.சாந்த நவரட்ண - உறுப்பினர்</u>**

தொழில்நுட்ப குழுவை ஏற்றுக்கொள்வது பொருத்தமா இல்லையா என்பதை மாத்திரம் சபையில் கேட்டதாகவும், எனினும் தற்போது இடம் தொடர்பான விவாதத்திற்கு சென்றதாகவும், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு தொடர்பாக கொண்டு வரப்பட்ட பிரேரணை ஆமோதிக்கப்பட்டதாகவும், நகர சபை மற்றும் கொஸ்ஸின்ன தகனச்சாலையை குறித்து கதைத்தாகவும், நாம் எமது சபையின் வருமானத்தை அதிகரித்துக் கொண்டு எமது மக்களுக்கு பெறுமதியான சேவையை வழங்கும் முகமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், முதலாவது விடயமாக கௌரவ ஜயபதி உறுப்பினரின் பிரேரணை மேற்கொள்ளப்பட்டிருந்தால் சிறந்தது. இரண்டாவது விடயமாக சபை நிதியிலிருந்து பும்மலே தகனச்சாலையை நிர்மாணிப்பதற்கு பிரேரிக்கப்பட்டதாகவும் அதில் கஹவத்த லெகும்தெனிய, பன்விலதென்ன, துன்தெனிய, வெதென்ன, கம்பொலவத்த, நில்லம்ப, வாரியகல, கலுகமுவ, ஆகிய பிரதேுசங்கள் தொடர்புறும் இடமாக பும்மலேயில் நிர்மாணித்தல் மிகவும் சிறந்தது. நிலம், அமைவிடம், போக்குவரத்து வசதி போன்றி விடயங்களில் பும்மலே மிகவும் சிறந்தது எனவும் தெரிவித்து, பும்மேலேயில் தகனச்சாலையை அமைப்பது தொடர்பாக நம் அனைவரினதும் ஒத்துழைப்பை வழங்குவோம் என தெரிவித்தார்.

**<u>கௌரவ.அகலவத்த - உறுப்பினர்</u>**

பும்மலே தகனச்சாலை தொடர்பாக முன்வைக்கப்பட்ட தொழில்நுட்ப சேவைகள் குழுவை சபை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும், எவ்வாறாயினும் தொழில்நுட்ப குழு எவ்வாறான காரணத்தினாலாவது ஏற்றுக்கொள்வத பொருத்தமாகும் எனவும், பும்மலே நிலம் தொடர்பான பிரச்சினைகள் இருப்பதால், இவ்விடம் கல்வி அமைச்சிற்கு சொந்தமானது என தகவல் கிடைத்திருப்பதாகவும், அதனால் தேடிப்பார்த்து நிலத்தை முறையாக பெற்றுக் கொண்டு நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு முன் நிலம் தொடர்பான உரிமை தொடர்பாக சரியான தீர்மானத்திற்கு செல்ல வேண்டும் என தெரிவித்தார்.

**<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>**

நாம் பிரேரணை முன்வைத்தது தொழில்நுட்ப குழுவை நியமிப்பதற்கு ஆகும். அது தொடர்பாக யாரும் எதிர்ப்பு வெளியிடவில்லை என தெரிவித்தார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
அனைவரும் கைகளை உயர்த்தி இணக்கத்தை தெரிவித்தனர்.
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
**தீர்மான இலக்கம் 5 (1.4)**

5(1.4) 2022ஆம் ஆண்டிற்காக நிதி மற்றும் கொள்கை திட்டமிடல் குழு, வீடு மற்றும் சமூக அபிவிருத்தி குழு, தொழில்நுட்ப சேவைகள் (செயற்திட்டங்கள்) குழு, சூழல் மற்றும் வசதிகள் குழு ஆகிய குழுக்களை நியமிப்பதற்காக பொதுச்சபையின் அனுமதியை பெற்றுக்கொள்வது பொருத்தமாகும் என தெரிவித்தார்.

**கௌரவ.கீர்த்தி ரத்னாயக்க - உறுப்பினர்**

ஒவ்வொரு வருடமும் பிரதேச சபைக்குள் நடைமுறைப்படுத்தப்படும் 4 குழுக்களை நியமிப்பது பொருத்தமாகும் என கொண்டு வரப்பட்ட பிரேரணையை நான் ஆமோதிக்கின்றேன்.

மேலும் இக்குழுக்கள் 4உம் இதுவரை செயற்பட்ட விதத்திலேயே செயற்படுவது பொருத்தமாகும் எனவும், குழுக்களில் பெயர் உள்ளடக்கப்படாத கௌரவ சாமிக ருவன் தசநாயக்க உறுப்பினர் அவர்களின் பெயரை பொருத்தமான குழுவிற்கு உள்வாங்குமாறும், நடைமுறைப்படுத்தப்படும் 4 குழுக்களுக்கு நடாத்தப்படும் கூட்டங்களின் எண்ணிக்கையில் குறைந்தபட்சம் 2/3 இற்காவது வருகை தர வேண்டும் எனவும் முடியுமாக இருப்பின் அனைத்து கூட்டங்களுக்கும் வருகை தருமாறு வேண்டுகோள் விடுப்பதாகவும், குழுக்களை நடைமுறைபப்டுத்துவதற்காக ஒத்துழைப்பை வழங்குமாறும் நடைமுறைப்படுத்தப்படும் குழுக்கள் அனைத்தும் முன்பு நடைபெற்ற முறையிலேயே நடைமுறைப்படுத்துவது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

**கௌரவ.சாந்த நவரட்ண - உறுப்பினர்**

இருந்த குழுக்களை அவ்வாறே நடைமுறைப்படுத்துவது பொருத்தமாகும் எனவும், பெயர் முன்வைக்கப்படாத கௌரவ உறுப்பினர்களை குழுக்களுக்கு உள்வாங்குமாறும் அனைத்து குழு கூட்டங்களுக்கும் உள்வாங்குமாறும், அவ்வாறில்லாவிட்டால் குறைந்தபட்சம் 2/3 இற்காவது வருகை தந்து ஒத்துழைப்பை வழங்குமாறு கோரி அப்பிரேரணையை ஆமோதித்தார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
நடைமுறையில் இருந்த குழுக்களை நியமித்தமை தொடர்பாக நான் மகிழ்ச்சியடைகின்றேன். எவ்வாறு நியமித்தாலும் சபையில் உள்ள 43 உறுப்பினர்களும் குழுக்களுக்கு உள்வாங்கப்படுவார்கள். உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல நானும் மிக கௌரவமாக கேட்டுக்கொள்கின்றேன் எனவும், வருடத்தில் நடைபெறும் 12 கூட்டங்களில் 6இற்காவது வருகை தருமாறு கேட்டுக் கொண்டார்.

**கௌரவ.யஸஸ் தெனுவர - உறுப்பினர்**

சுற்றாடல் குழு வருடத்திற்கு 3 முறையாவது நடாத்தப்படும். இதில் அக்குழுவில் உள்ள உறுப்பினர்கள் அசாதாரணத்திற்கு முகம் கொடுக்கின்றனர். அங்கு கலந்துரையாடப்படும் விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. குழு தெளிவாக இருப்பின் எம்மால் கதைக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
கடந்த வருடம் கொரோனா கொள்ளை நோய் நிலமை காரணமாக பிரச்சினைகள் தோன்றியது. எனினும் இந்த வருடத்தில் 4 குழுக்களும் ஒவ்வொரு மாதமும் நடாத்தப்படுவதால் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.
அனைவரும் கைகளை உயர்த்தி இணக்கத்தை தெரிவித்தனர்.
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**

**தீர்மான இலக்கம் 5 (1.5)**

5(1.5) இலக்கம் 409, துனதெனிய எம்.டி.சுமனாவதி அவர்களுக்கு சொந்தமான உரித்து இலக்கம் 0014760 கண்டி கே.நி.இலக்கம் 320096 இன் வல இலக்கம் 02இல் கே.அ.86 மற்றும் 84 இற்கிடையில் அமைந்துள்ள கம்சபா பாதையை வர்த்தமானியிலிருந்து அகற்றி விடுதல் தொடர்பாக பொதுச்சபையின் அனுமதியை பெற்றுக்கொள்வது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

**கௌரவ உபதலைவர் அசேல அமரசேன அவர்கள்**

இப்பிரேரணை கடந்த சபைக்கு முன்வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய சபையின் குழு ஒன்றின் ஊடாக நிலைய பரிசோதனைக்கு எம்மை அனுப்பினார்கள், இங்கு பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கௌரவ.ரத்னாயக்க உறுப்பினர், கௌரவ.சாந்த நவரட்ண உறுப்பினர், கௌரவ.அகலவத்த உறுப்பினர் மற்றும் நான் உட்பட குழு அவ்விடத்திற்கு சென்றதாகவும், 100 வருடங்கள் பழமையான அடபாகே பாலம் அருகில் வைத்தியர் ஜனாக சோமரத்ன அவர்களின் வீட்டிற்று அருகில் உள்ள பாதை அவருடைய வீட்டின் பின்பதாக வழங்கி கௌரவ அகலவத்த உறுப்பினர் மற்றும் தான் சேர்ந்து இவ்வாறான நடவடிக்கையை மேற்கொண்டதாகவும், மக்களின் பிரச்சினைகளை நாம் தீர்தத்துக் கொடுக்க வேண்டும், பிரதேச சபை உறுப்பினர்களுக்கு கிராமங்களில் உள்ள பிரச்சினைகள் முன்வைக்கப்படுகின்றன. சுமனாவதி அவர்கள் எவ்வளவாய் பாதிக்கப்பட்டிருப்பார் எனக் கண்டதாகவும், இங்கு பாதையொன்று அருகில் கூட காணப்படவில்லை. பிரதேச மக்களும் பாதையொன்று இல்லை என உறுதிப்படுத்தினார்கள், அவர்களின் மகனிற்கு வீடொன்றை கட்டுவதற்கு இவர்கள் கோரிக்கை விடுத்திருந்ததாலும், நானும் இவ்விடத்தை பாரத்த படியாலும், இலக்கம் 409, துனதெனிய எம்.டி.சுமனாவதி அவர்களுக்கு உரித்தான உரித்து இலக்கம் 0014760 கண்டி கே.சி.இலக்கம் 320096இல் வலய இலக்கம் 02இல் கே.அ 86 மற்றும் 84இற்கிடையில் அமைந்துள்ள கம்சபா பாதையை வர்த்தமானியிலிருந்த அகற்றி விடுதல் பொருத்தமாகும் என கொண்டு வரப்பட்ட பிரேரணையை நான் ஆமோதிக்கின்றேன்.

**கௌரவ.அகலவத்த - உறுப்பினர்**

இவ்வாறான நடவடிக்கை அடபாகே பிரதேசத்திலும் நடைபெற்றது. பாரிய மக்கள் தொகையினர் பாவிக்கும் பாதையை வேறு இடத்தில் அமைத்ததாகவும், இப்பாதையை மக்கள் பாவிப்பதில்லை எனவும், இங்கு பாதை இல்லாத படியாலும் கௌரவ உப தலைவர் முன்மொழிந்த பிரேரணையை நான் ஆமோதிக்கின்றேன்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**

என்னால் தனி தீர்மானம் மேற்கொள்ள முடியாது. சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு பொதுச்சபைக்கு முன்வைத்தாக தெரிவித்தார்.

அனைவரும் கைகளை உயர்த்தி இணக்கத்தை தெரிவித்தனர்.
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
**தீர்மான இலக்கம் 5 (1.6)**

5(1.6) நூலக உதவியாளர்கள் இருவரின் சேவையை தொடர்ந்தும் அதிகரித்துக் கொள்வதின் கீழ் 2019.10.18 திகதியிலிருந்து 2021.12.31 திகதி வரை சேவையை அதிகரித்துக் தருமாறு மற்றும் 2022.01.01ஆம் திகதியிலிருந்து இன்னும் ஒருவருட காலத்திற்கு நூலக உதவியாளர்கள் இருவரின் சேவையை தொடர்ந்தும் அதிகரித்துக் கொள்வதற்காக பொதுச்சபையின் அனுமதியை பெற்றுத்தருமாறு கேட்டுக் கொண்டார்.

**கௌரவ.கீர்த்தி ரத்னாயக்க - உறுப்பினர்**

நூலக உதவியாளர்களின் சேவை எமக்கு அத்தியாவசியமாக உள்ள வேளையில் பிரேரணைக்கமைய 2019.10.18ஆம் திகதியிலிருந்து 2021.12.31ஆம் திகதி வரை சேவையை அதிகரித்துத் தருமாறு மற்றும் 2022.01.01 திகதியிலிருந்து எதிர்வரும் ஒரு வருடத்திற்கு நூலக உதவியாளர்கள் இருவரின் சேவையை மேலும் அதிகரித்துக் கொள்வது தொடர்பில் பொதுச்சபையின் அனுமதியை பெற்றுக்கொள்வது பொருத்தமாகும் என கொண்டு வரப்பட்ட பிரேரணையை நான் ஆமோதிக்கின்றேன்.

**கௌரவ உபதலைவர் அசேல அமரசேன அவர்கள்**

நூலக பிரிவு எமக்கு அத்தியாவசியமானது, எமது பிள்ளைகள் அறிவை பெற்றுக் கொள்வதற்கு உள்ள இடமாகும். உடபலாத பிரதேச சபையின் நூலகங்களுக்கு அலுவலர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். அது எமக்கு பாரிய பிரச்சினையாகும், கடந்த காலத்தில் நான் தொலுக நூலகத்தை மேற்பார்வை செய்தேன். அங்கு வாலிபர்கள் டிஜிட்டல் எனும் விடயத்தில் பாரிய அர்ப்பணிப்பை மேற்கொள்கின்றனர். தொழில்நுட்ப அறிவு குறைந்த காலத்தில் அப்பிள்ளைகள் அவர்களின் அருகில் உள்ளவர்களிடத்தில் அறிவை பெற்றுக்கொண்டு உடபலாதையிலுள்ள நூலகங்கள் 6யும் நடைமுறைப்படுத்துவதற்காக அவர்களின் சேவையை வழங்கியதாகவும், இப்பிள்ளைகள் கஷ்டப்பட்டு வேலை செய்தாலும் சம்பளம் வழங்குவதில் பிரச்சினை தோன்றியுள்ளது. அது சபையிலுள்ள நாம் மேற்கொண்ட அசாதாரணமாக காண்கின்றேன். அதனால் நூலக உதவியாளர்கள் இருவரின் நியமனங்களை ஸ்தாபிப்பதற்காக நாம் செயற்திட்ட அறிக்கையை தயாரித்ததாகவும், அதனை ஆளையாளருக்கு அனுப்பினார்களா எனத் தெரியவில்லை. இவ்வாறான நடவடிக்கைகளில் நாம் அதிகாரி ஒருவரை அனுப்பியாவது அந்நடவடிக்கைகள் குறித்து ஆணையாளருடன் கதைக்க வேண்டும். இல்லாவிட்டால் அப்பிள்ளைகளுக்கு அசாதாரணம் நிகழும். அப்பிள்ளைகள் வேதனையுடன் அழுததாக நான் அறிந்து கொண்டேன். எனினும் நாம் வேலை வாங்கிக் கொண்டு அவர்களை அழுவதற்கு இடமளிக்கு கூடாது. சபையிலுள்ள யாராவது அதிகாரி ஒரவர் இவர்களிடத்தில் நடவடிக்கை ஒன்றை நிறைவேற்றிக் கொண்டால் கொடுப்பனவு வழங்குவது தொடர்பாக இதைவிட தேடிப்பார்க்க வேண்டும். தொழிலாளர், உதவி தொழிலாளர், நூலகங்கள் மாத்திரமல்ல அனைவரை குறித்தும் தேடிப்பார்ப்பது எமது பொறுப்பாகும். இவர்களுக்கு உள்ள பிரச்சினைகளை குறித்து பார்க்க வேண்டும். எமக்கு சாரதிகளின் பிரச்சினை உள்ளது. சபை அனுமதித்து அனுப்பினால் உள்வாங்கும் நடவடிக்கைகளை அனுமதிக்க முடியும் என ஆணையாளர் தெரிவித்துள்ளதாகவும், நாளாந்த கூலி அடிப்படையில் தொழிலாளர்களை சேர்த்துக் கொள்வதற்கு அனுமுதியை வழங்குவதாக ஆளையாணர் தெரிவித்துள்ளார் எனவும், கம்பொல நகர சபையில் தொழிலாளர்கள் 20 பேர் டெங்கு பரிசீலணைக்காக ஆணையாளரின் அனுமதியுடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எம்மாலும் அவ்வாறு செய்ய முடியும் எனவும் அதனால் தொழிலாளர் நியமனத்திற்காவது அனுப்பி இச் சேவையாளர்கள் இருவரின் சேவையை தொடர்ந்தும் கால எல்லையை அதிகரிக்குமாறு தெரிவித்தார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**

நாளாந்த கூலி அடிப்படையில் யாரையும் சேர்த்துக் கொள்வதில்லை என ஆணையாளர் எழுத்து மூலம் எமக்கு அறிவித்துள்ளார். செயலாளருக்கு உதவி ஆணையாளர் ஊடாக எமக்கு தொழிலாளர்கள், சுகாதார தொழிலாளர்கள், வீதித் தொழிலாளர்கள் பதவிகளில் உள்ளவர்கள் ஓய்வு பெறல் மற்றும் இறப்பதின் காரணமாக காணப்படும் குறைபாடுகளுக்கு சேர்த்துக் கொள்வதற்கு அனுமதியை கேட்டதாகவும், அப்போது உதவி ஆணையாளர் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்திருப்பது என்னவெனில் சுற்றுதிருபத்தை சரியாக வாசித்துப் பார்த்து கோரிக்கைகளை முன்வைக்குமாறு ஆகும். அதனால் நாம் சிரமத்திற்கு உள்ளாவதாகவும், நாம் அனைத்தையும் செய்தாலும், தெரிவித்து அனுப்பினாலும் இன்னும் சரியான தீர்மானங்கள் இல்லை. அதனால் நான் மீண்டும் ஆணையாளரை சந்திப்பதற்கு சென்றேன். அப்போது அவர் பொதுச்சபை தீர்மானத்தை பெற்று அனுப்புமாறு தெரிவித்தார். இதற்கு முன்பும் நீங்கள் பிரேரித்த நாளாந்த கூலி அடிப்படையில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்தாலும் கார்ய சாதக பலகாயவின் உள்வாங்கல் காரணமாக உள்வாங்கல்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என தெரிவித்தார்.

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**

அனைவரும் கைகளை உயர்த்தி இணக்கத்தை தெரிவித்தனர்.
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**அவசர பிரேரணைகள்**

**கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்**
**தீர்மான இலக்கம் 5 (1.7)**

5(1.7) உடபலாத பிரதேச சபையில் தற்போது குறைபாடாக காணப்படும் சுகாதார தொழிலாளர்கள் பதவிகள் மற்றும் வீதித் தொழிலாளர்கள் பதவிகள் மற்றும் தகனச்சாலை உதவியாளர் பதவிகளுக்காக நாளாந்த கூலி அடிப்படையில் தொழிலாளர்களை இணைத்துக் கொள்வது தொடர்பாக பொதுச்சபையின் அனுமதியை பெற்றுக்கொள்வது பொருத்தமாகும் என தெரிவித்தார்.

**<u>கௌரவ.யஸஸ் தெனுவர - உறுப்பினர்</u>**

தற்போது 4 வருடங்கள் கழிந்திருந்தாலும், எந்தவொரு உறுப்பினருக்கும் கிராமத்திற்கு எவ்வித வேலையும் சரியாக செய்ய முடியாமல் இருப்பது இந்த தொழிலாளர்களின் குறைபாடு காரணமாக ஆகும். ஆகவே உடபலாதையின் உறுப்பினர்களாய் நாம் யாதாயினு் வேலைகளை செய்தோம் என சொல்ல முடியாமல் இருக்கிறது, கிராமத்தின் பாதையொன்றை சுத்திகரித்துக் கொள்வதற்கு, வீதி விளக்கொன்றை பொருத்திக் கொள்வதற்காவது சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. அதனால் கௌரவ தலைவர் முன்மொழிந்த பிரேரணைக்கமைய குறைபாடுகள் காணப்படும் பதவிகள் தொடர்பாக தொழிலாளர்களை இணைத்துக் கொண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்வோம் என தெரிவித்து முன்மொழியப்பட்ட பிரெரணையை ஆமோதித்தார்.

**<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>**
தொழிலாளர்கள் இல்லாததால் நாம் பாரிய பிரச்சினையில் இருக்கின்றோம், அதற்கமைய பொதுச்சபையின் தீர்மானத்திற்கமைய நடவடிக்கை மேற்கொள்வோம் என தெரிவித்தார்.
அனைவரும் கைகளை உயர்த்தி இணக்கத்தை தெரிவித்தனர்.
அதற்கமைய சபை அறிக்கை ஒருமனதாக சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.

**<u>கௌரவ.தலைவர் D.G.குணசேன அவர்கள்</u>**
**<u>தீர்மான இலக்கம் 5 (1.8)</u>**

5(1.8) PF-7352 இலக்கம் உடைய கெப் வாகனம் காணப்படும் நிலமையை அறிக்கைபடுத்துமாறும் இவ்வாகனம் 2021.05.03ஆம் திகதி தொழில்நுட்ப கோளாறுக்கு உட்பட்டதன் காரணமாக பழுதுபார்ப்பதற்காக கட்டுகஸ்தோட்டை யுனைடட் மோடர்ஸ் நிறுவனத்திற்கு கொண்டு சென்றதாகவும், அந்நிறுவனத்தினால் வாகனத்தை கழற்றி பழுதுபார்த்தலுக்காக ரூ.1144288.39 தொகையான மதிப்பீடொன்று வழங்கப்பட்டுள்ளதாகவும் அதன்பின் சந்தையில் காணப்படும் விலைகளை விட இவ்விலைகள் அதிகம் என்பதால் விலைகளை குறைக்குமாறு பொதுச்சபையினால் கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும், அதற்கான பதில் கிடைக்கவில்லை எனவும், இதனால் தற்போது 9 மாத காலம் கடந்துள்ளதாகவும் தெரிவித்து இவ்வாகனத்தின் பழுதுபார்தத்லை கட்டுகஸ்தோட்ட யுனைடட் மோடர்ஸில் செய்வதா? இல்லையா? என்பது குறித்து பொதுச்சபையின் தீர்மானத்தை பெற்றுக் கொள்வது பொருத்தமாகும் என தெரிவித்தார்.

**<u>கௌரவ உபதலைவர் அசேல அமரசேன அவர்கள்</u>**

இங்கு ஏற்பட்ட பிழைகள் தொடர்பில் பரிசீலனை ஒன்று மேற்கொள்ளப்படுவதாகவும், இவ்வாகனத்தை யுனைடட் மோடர்ஸ் நிறுவனத்திலேயே பழுதுபார்த்தால் மிகவும் பொருத்தமாகும் எனப்து எனது கருத்தாகும். அதனால் அரச நிறுவனங்களின் வானகங்களை ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனத்தில் மேற்கொள்ள வேண்டம் எனவும், இந்நிறுவனம் உலகமே ஏற்றுக்கொண்ட ஒரு நிறுவனமாகும். எதிர்காலத்தில் தெரிவாகும் தலைவருக்கும் பயணங்கள் மேற்கொள்வதற்கு இவ்வாகனம் தேவைப்படும் என்பதால் வாகனத்தை கொண்டுவந்த ஒரு சாரதியை நியமித்து இவ்வாகனத்தில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் தொடர்ச்சியாக சாரதியினால் மேற்கொள்ளப்படும் பிழைகள் தொடர்பாகவும் அவர்களின் தனிப்பட்ட கோவைக்கு கடிதங்கள் அனுப்ப வேண்டும் எனவும் வாகனத்தில் சிறு கீறல் பட்டாலும் அதனை அறிக்கையிட வேண்டும் எனவும் தெரிவித்து இவ்வாகனம் தொடர்பான பழுதுபார்த்தலை யுனைடட் மோடர்ஸ் நிறுவனத்தில் மேற்கொள்வது பொருத்தமாகும் என நான் பிரேரிக்கின்றேன்.

**<u>கௌரவ.யஸஸ் தெனுவர - உறுப்பினர்</u>**

